(1)

செயற்பொறியாளர் (வே.பொ) கோவை அவர்களின் செயல்முறை ஆணை.

பிறப்பிப்பவர்: திரு.ச.சோமசுந்தரம், பி.இ.,

செ.மு.ஆ.எண் ஆ/ 1182/2019 நாள் :30.12.2019

பொருள் : பணிக்குழு - தமிழ் நாடு அமைச்சுப் பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - நேரடி போட்டித் தேர்வு 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டில் செல்வி.க.சுகன்யா, இளநிலை உதவியாளர் (பி.அ) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது - 18.03.2019 முற்பகல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து கொண்டது - 18.03.2019 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை நிலை எண் 191, பொதுத்துறை நாள் 01.02.1962
2. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலர் சென்னை -3 அவர்களின் கடிதம் எண் 1012/PSD-G2/2019 நாள்: 20.02.2019 மற்றும் 27.02.2019
3. சென்னை -5 வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பமே) அவர்களின் செயல்முறை ஆணை எண் அநிபி5/139388/2018, நாள்: 05.03.2019
4. தலைமைப் பொறியாளர்(வே.பொ) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் அப2/8448/2019 நாள்: 08.03.2019
5. செயற்பொறியாளர் (வே.பொ), கோவை அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ/ 1182/2019 நாள் 15.3.2019.
6. தலைமைப் பொறியாளர் (வே.பொ) சென்னை அவர்களின் கடிதம் எண் அப2/8448/2019 நாள்: 14.8.2019

******

ஆணை:-

பார்வை (2) மற்றும் (3)-ல் கண்டுள்ள செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2015-16,2016-17, 2017-18-ம் ஆண்டு தொகுதி 4-ல் அடங்கியுள்ள பணிகளுக்கான நேரடிப் போட்டித் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 4-ல் காணும் செயல்முறை ஆணையின்படி கோவை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து பார்வை 5-ல் காணும் செயற்பொறியாளர் (வே.பொ), கோவை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக இவ்வலுவலகத்திற்கு பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி.க.சுகன்யா அவர்கள் இளநிலை உதவியாளராக 18.3.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

....2

பார்வை 1-ல் காணும் அரசாணையில் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்ட அமைச்சுப் பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்ய ஓராண்டு கழிய வேண்டும் என்ற நிர்பந்தம் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் மற்றும் பார்வை 6-ல் காணும் தலைமைப் பொறியாளர்(வே.பொ) சென்னை அவர்களின் கடிதத்தில் இப்பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதலே பணிவரன்முறை படுத்தலாம் என தெரிவித்துள்ளதாலும் இவர் இளநிலை உதவியாளராக அரசுப்பணியில் சேர்ந்த நாளான 18.3.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

"The regularisation is subject to the outcome of the WPs pending on the files of the Hon`ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High court of Madras relation to the recruitment to the post included in Combined Civil Service Examination – IV for the year 2015-16,2016-17,and 2017-18 recruitment"

இப்பணியாளர் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவத்தினராக வைத்து ஆணையிடப்படுகிறது.

இவருக்கு தகுதி காண் பருவம் முடித்தவுடன் இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவர் ஆவார் என உத்தரவிடப்படுகிறது.

மேலும் இவ்வுத்தரவு தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்படுகிறது எனவும் சான்றளிக்கப்படுகிறது.

செயற்பொறியாளர்(வே.பொ),
கோவை 30/12/19

பெறுநர்:

செல்வி க.சுகன்யா, இளநிலை உதவியாளர் இவ்வலுவலகம்

நகல்: தலைமைப் பொறியாளர்(வே.பொ) சென்னை, அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: கண்காணிப்பு பொறியாளர் (வே.பொ), கோவை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: வேளாண்மை இணை இயக்குநர், கோவை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: இருப்பு கோப்பிற்கு.